ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1710/8 - 2011 ජූනි 13 වැනි සඳුදා - 2011.06.13
*1710/8 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின்படி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன ஆகிய நான், இச்சபையின் படல்கும்புர நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் நீர் பம்பி நிலையம் அமைப்பது தொடர்பாக காணித்துண்டொன்று தேவைப்படுவதனால், எடுத்துக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமைக் கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.*

*தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன,*
*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.*

*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை, பத்தரமுல்லை,*
*2011, யூன் 07.*
*5/2/2/908.*

**அட்டவணை**

*மொனராகலை மாவட்டம், படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவில், இல. 133 C, மாளிகாதென்ன கிராம அலுவலர் பிரிவின், பரன அளுபொத்த எனும் கிராமத்தில் அமைந்துள்ள அளுத் அமுன பரகஹஆராவேஹேனை எனும் காணியின் முழு விஸ்தீரணத்தில் சுமார் 0.025 ஹெக்டேயார் ( 10 பேர்ச்சஸ்) விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு :-*

*வடக்கு : திரு. நிமல் யசரத்ன என்பவர் உரிமைகோரும் காணி ;*
*கிழக்கு : கரவலையிலிருந்து பரன அளுபொத்தைக்குச் செல்லும் பாதை ;*
*தெற்கு : இதே காணியின் எஞ்சிய பகுதி;*
*மேற்கு : இதே காணியின் எஞ்சிய பகுதி.*

*உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும் : திருமதி ஹேமசந்திர காந்தி,*
*காந்தி இல்லம்,*
*பரன அளுபொத்த,*
*படல்கும்புர.*

*6 - 09*

## 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின்படி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன ஆகிய நான், இச்சபையின் நக்கல நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் களஞ்சிய தாங்கி அமைப்பது தொடர்பாக காணித்துண்டொன்று தேவைப்படுவதனால், எடுத்துக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமைக் கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.*

*தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன,*
*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.*

*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை, பத்தரமுல்லை,*
*2011, யூன் 07.*
*5/2/2/909.*

### அட்டவணை

மொனராகலை மாவட்டம், படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவில், மடுகொட்டன் அராவை கிராம அலுவலர் பிரிவின், புஸ்ஸலாவை எனும் கிராமத்தில் அமைந்துள்ள கட்டுவஹேன எனும் காணியில் மொனராகலை பிரிவுக்கு பொறுப்பான நிலஅளவையியலாளரினால் தயாரிக்கப்பட்ட இறுதியான கிராம வரைபடத்தின் 245 இன் மேலதிக இல. 03 ஐ கொண்ட துண்டு இல. 277 இன் முழு விஸ்தீரணத்தில் சுமார் 0.037 ஹெக்டேயார் ( 15 பேர்ச்சஸ்) விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு :-

வடக்கு : திருமதி ரொஸலின் பெரேரா உரிமைகோரும் இதே காணியின் எஞ்சிய பகுதி ;
கிழக்கு : திருமதி ரொஸலின் பெரேரா உரிமைகோரும் இதே காணியின் எஞ்சிய பகுதி ;
தெற்கு : திருமதி ரொஸலின் பெரேரா உரிமைகோரும் இதே காணியின் எஞ்சிய பகுதி ;
மேற்கு : திரு. டீ. எம். குணபால உரிமைகோரும் காணி.

*உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும் :* திருமதி பத்திரனகே ரொஸலின் பெரேரா
ஹெலகடே,
புஸ்ஸலாவை,
படல்கும்புர.

*6 - 25*

---

## 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின்படி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன ஆகிய நான், இச்சபையின் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியளிப்பு 5 செயற்திட்டத்தின் கீழ் மன்னார் நீர் வழங்கல் திட்டத்தின் துளைதுவாரக் கிணறு அமைப்பது தொடர்பாக காணித்துண்டொன்று தேவைப்படுவதனால் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமைக் கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.*

*தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன,*
*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.*

*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை, பத்தரமுல்லை,*
*2011, யூன் 07.*
*5/2/1/913.*

**அட்டவணை**

மன்னார் மாவட்டம், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில், காஞ்சித்தலம் கிராம அலுவலர் பிரிவின், காஞ்சித்தலம் எனும் கிராமத்தில் அமைந்துள்ள வயல் காணி எனும் காணியின் முழு விஸ்தீரணத்தில் சுமார் 4 ஏக்கர் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு :-

வடக்கு : மன்னார் - மதவாச்சி பிரதான வீதி ;
கிழக்கு : எடுத்துக்கொள்ளப்படும் வயல் காணியின் எஞ்சிய பகுதி ;
தெற்கு : எடுத்துக்கொள்ளப்படும் வயல் காணியின் எஞ்சிய பகுதி ;
மேற்கு : உயித்திராசகுளம் வீதி.

*உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும் :*

1. திரு. பிரீதிராஜ் அருள்குமாரன்,
இல. 8 B, 5/3, பெரேரா ஒழுங்கை,
கொழும்பு 06.

2. திரு. உதயன்,
12 ஆம் மைல்கல்,
நானாட்டான்.

06- 26